9

வட்டார வளர்ச்சி அலுவலர் (கி.ஊ.,)திருச்செங்கோடுவட்டாரம் அவர்களின் நடவடிக்கைகள்
முன்னிலை திரு.எஸ். டேவிட் அமல்ராஜ், பி.எஸ்.ஸி., எம்.பி.ஏ.,

ந.க.எண்.617/2022/தி3

நாள்.04.02.2022

பொருள் அனுமதியற்ற வீட்டு மனைப்பிரிவு வரன்முறைப்படுத்துதல் திட்டம் - நாமக்கல் மாவட்ட நகர் ஊரமைப்பு உதவி இயக்குநரால், நாமக்கல் மாவட்டம் திருச்செங்கோடு வட்டாரம், **தோக்கவாடி ஊராட்சி / கிராமம் சர்வே எண்.10/1 (pt), 11/1A1, 1B-ல் அமையும் 5.52 ஏக்கர் அல்லது 240523.85 சதுர அடி பரப்பளவில் அமைந்துள்ள ராம் நகர் என்ற** அனுமதியற்ற குடியிருப்பு மனைப்பிரிவினை வரன்முறைப்படுத்தி கொள்கை அளவிலான மனைப்பிரிவு ஒப்புதல் வரப்பெற்றது - வரன்முறைப்படுத்துதல் தொடர்பாக

பார்வை

1. அரசாணை எண்.78 வீட்டு வசதி மற்றும் நகர்புற வளர்ச்சித்துறை (UDE 4 (3) நாள்.04.05.2017
2. அரசாணை எண்.172 வீட்டு வசதி மற்றும் நகர்புற வளர்ச்சித்துறை (UDE 4 (3) நாள்.13.10.2017
3. உதவி இயக்குநர், மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம், நாமக்கல் அவர்களின் உத்தரவு ந.க.எண்.3328/2021 நாமா, நாள்.24.01.2022
4. ஊரக வளர்ச்சி உதவி இயக்குநர் (ஊராட்சிகள்) நாமக்கல் அவர்களின் சுற்றறிக்கை ந.க.எண.484/2020/ஊ.நி.4 நாள்.10.03.20
5. திரு. G. உதயகுமார், 2-40, கிழக்கு தொட்டிபாளையம், காடச்சநல்லூர், குமாரபாளையம் என்பவரின் விண்ணப்பம் நாள்.03.02.2022

**********

**உத்தரவு:**

பார்வை 1 மற்றும் 2-ல் காணும் அரசாணைகளில் அங்கீகாரம் இல்லாத வீட்டுமனைகளை வரன்முறைப்படுத்திக் கொள்ள வழிகாட்டி நெறிமுறைகள் வழங்கப்பட்டதை தொடர்ந்து நாமக்கல் மாவட்டம், திருச்செங்கோடு வட்டாரம், **தோக்கவாடி ஊராட்சி / கிராமம் சர்வே எண்.10/1 (pt), 11/1A1, 1B-ல் அமையும் 5.52 ஏக்கர் அல்லது 240523.85 சதுர அடி பரப்பளவில் அமைந்துள்ள ராம் நகர் என்ற** அனுமதியற்ற குடியிருப்பு மனைப்பிரிவில் உள்ள விற்பனை செய்யப்படாத மனைகளை முறைப்படுத்திட பார்வை 3-ன்படி நாமக்கல் மாவட்ட நகர் ஊரமைப்பு உதவி இயக்குநர் அவர்களால் சில நிபந்தனைகளின்படி ம.வ.(வரன்முறை)/நாமா எண்.03/2022 என எண்ணிடப்பட்டு கொள்கை அளவிலான மனைப்பிரிவு (In principal approval of Layout Frame work) ஒப்புதல் வழங்கப்பட்டு வரப்பெற்றுள்ளது. மேற்படி விட்டுமனையிடங்களாக பிரிக்கப்பட்ட 95 மனையிடங்களில் 64 மனையிடங்கள் மட்டும் மனைப்பிரிவு அங்கீகாரம் வழங்கும் முன்னரே விற்பனை செய்யப்பட்டுள்ளது. எஞ்சியுள்ள விற்பனை செய்யப்படாத 31 மனையிடங்களில் பூங்கா/திறவிடத்திற்காக ஒதுக்கப்பட்ட பொது உபயோக இடம்

1. பூங்கா (மனை எண்.85) : 5562.00 ச.அடி.
2. சாலைகளின் மொத்த பரப்பளவு : 70801.42 ச.அடி.

ஆகியவை நீங்கலாக தற்சமயம் விண்ணப்பதாரரால் வரன்முறைப்படுத்தக் கோரப்படும் மனை எண்கள்.22S,23S,26,27,56,57,58,66,67,68,69,77,79,80,81,84,86A,86B,86C,87 மற்றும் 88 ஆகிய 21 (இருபத்து ஒன்பது மனைகளுக்கு - மனைகளின் பரப்பு: 3270.90 ச.மீ.) மட்டும் முறைப்படுத்துதல் கட்டணமாக ஒரு சதுர மீட்டருக்கு ரூ.45/- என்ற விகிதத்திலும், வளர்ச்சி கட்டணமாக ஒரு சதுர மீட்டருக்கு ரூ.25/- என்ற விகிதத்திலும் பின்வரும் விபரப்படி கட்டணங்கள் செலுத்தப்பட்டுள்ளது.

செலுத்தப்பட்டுள்ள கட்டணங்கள்

| வ.எண். | மனை எண்கள் | பரப்பளவு (ச.மீ) | கூர்ந்தாய்வு கட்டணம் | வரன்முறை கட்டணம் (ஒரு ச.மீ.க்கு ரூ.45/-) | வளர்ச்சிக்கட்டணம் (ஒரு ச.மீ.க்கு ரூ 25/-) |
|---|---|---|---|---|---|
| 1 | 22S,23S,26,27,56, 57,58,66,67,68,69, 77,79,80,81,84,86 A,86B,86C,87 மற்றும் 88 | 3270.90 | 15500 | 147195 | 81775 |
| மொத்தம் | 21 | 3270.90 | 15500 | 147195 | 81775 |
| | | | DTCP/L/0365856/ 2017 நாள்.26.07.2018 DTCP, Namakkal Canara Bank A/c.4038101001452 நாள்.31.01.2022 | அரசு கருவூல கணக்கு தலைப்பு 0217-60-800-AT-22730 SBI, T.code செலுத்து சீட்டு எண்.20220203002592, நாள்.03.02.2022 | கனரா வங்கி கணக்கு எண்.6428101001015 நாள் 03.02 2022 (ம) 04.02.2022 |

எனவே மேற்படி நாமக்கல் மாவட்டம், திருச்செங்கோடு வட்டம் தோக்கவாடி ஊராட்சி / கிராமம் சர்வே எண்.10/1 (pt), 11/1A1, 1B-ல் அமையும் 5.52 ஏக்கர் அல்லது 240523.85 சதுர அடி பரப்பளவில் அமைந்துள்ள ராம் நகர் என்ற அனுமதியற்ற குடியிருப்பு மனைப்பிரிவில் உள்ள மனை எண்கள்.22S,23S,26,27,56,57,58,66,67,68,69,77,79,80,81,84,86A,86B,86C,87 மற்றும் 88 ஆகிய 21 (இருபத்து ஒன்பது மனைகளுக்கு - மனைகளின் பரப்பு: 3270.90 ச.மீ.) மட்டும் கீழ்க்காணும் நிபந்தனைகளுக்குட்பட்டு வரன்முறை செய்து இதன்வழி உத்தரவிடப்படுகிறது.

## நிர்ணயிக்கப்படும் நிபந்தனைகள்

1. இவ்வுத்தரவின் மூலம் வரன்முறை செய்யப்படும் வீட்டுமனைகளினை வீடுகள் கட்டுவதற்கு மட்டும் பயன்படுத்த வேண்டும். அபாயகரமான மற்றும்அருவருககத்தக்க தொழிற்சாலைகள் ஏதும் ஏற்படுத்திட அனுமதியில்லை. மனை மற்றும் மனையமைப்பானது அரசாணை விதிமுறை நிபந்தனைகளுக்கு உட்பட்டிருக்க வேண்டும். அரசின் கொள்கை அளவிலான மனைப்பிரிவு அங்கீகாரத்தில் அரசு மாற்றங்கள் ஏதேனும் செய்து உத்தரவுகள் பிறப்பிக்கப்பட்டால் அந்த உத்தரவுகளுக்கு மனுதாரர் கட்டுப்பட்டவராவார். இவ்வரன்முறை உத்தரவானது அரசு மற்றும் சம்பந்தப்பட்ட உள்ளாட்சி அமைப்பினால் பின்னாளில் தெரிவிக்கபடும் நிபந்தனை விதிமுறைகளுக்கும், முன் பின்னிட்ட இதர சட்ட விதிமுறைகளுக்கும் கட்டுப்பட்டது.
2. இவ்வீட்டுமனைப் பிரிவு வரன்முறைக்கு மனுதாரர் செலுத்தியுள்ள கட்டணங்களில் வேறுபாடுகள் ஏதுமிருந்து கட்டணம் செலுத்த வேண்டியிருப்பது ஏதேனும் பின்னர் அறியப்படின் அதனை மனுதாரர் செலுத்தினால் மட்டுமே இவ்வுத்தரவு செல்லுபடியாகும் மனுதாரர் கட்டணம், மனையின் அளவு மற்றும் உரிமை குறித்து தவறான தகவல்களையோ ஆவணங்களையோ அளித்திருப்பின் இவ்வுத்தரவு செல்லுபடியாகாது.
3. இவ்வீட்டுமனை பிரிவு தொடர்பான பத்திர பதிவுகள் மற்றும் நில உடமை தொடர்பாக ஏற்படும் சிவில் மற்றும் இதர வழக்குகளுக்கும் மனுதாரரே முழு பொறுப்பாவார். இவ்வுத்தரவானது மனுதாரருக்கு நில உரிமையை ஏற்படுத்துவது ஆகாது.
4. வீட்டுமனைப்பிரிவுகளில் ஏற்படுத்தப்பட்டுள்ள சாலைகள் தற்போதைய நிலையிலேயே இருக்க வேண்டும். இதில் எவ்வித மாற்றங்களும் ஏற்படுத்தக்கூடாது. மனைப்பிரிவு வரைபடத்தில் பிரிக்கப்பட்டுள்ள மனை நில அளவுகளின் விபரங்களை இவ்வலுவலக அனுமதியின்றி மாற்றி அமைத்தல் கூடாது.
5. திறந்தவெளி இடத்திற்காக ஒதுக்கப்பட்ட நிலத்தின் வாயிலாக மனுதாரரால் விற்பனை செய்யப்பட உள்ள மனைநிலங்களுக்காக உயர் அழுத்த / சாதாரண மின் அழுத்த மின்சார லைன்கள் அமைத்து மின்சார வசதிகள் செய்து கொள்ள அனுமதியில்லை. மேற்குறிப்பிட்ட நிபந்தனைகளை மீறினால் இம்மனைப்பிரிவு அங்கீகாரம் முன்னறிவிப்பின்றி ரத்து செய்யப்படும்.
6. இமமனைப்பிரிவில் ஒப்படைக்கப்பட்டுள்ள பூங்கா, பொதுவிடம் மற்றும் சாலைக்கான இடங்களை Sub divisions செய்து தொடர்புடைய கிராம ஊராட்சி வசம் ஆவணங்கள் ஒப்படைக்கப்பட வேண்டும். பூங்கா/ பொதுவிடம் வேலியிடப்பட்டு, பெயர்ப்பலகை வைக்கப்பட வேண்டும்.
7. சாலைகளின் எல்லையில் இருந்து ஒரு மீட்டருக்குள் நிழல்தரும் மரங்கள் எதிர்த்தாற்போல் அடுத்தடுத்து 9 மீட்டர் தொலைவிற்கு மேற்படாத வகையில் நடப்பட்டு பராமரிக்கப்பட வேண்டும்.

வட்டார வளர்ச்சி அலுவலர் (கி.ஊ.,)
திருச்செங்கோடு வட்டாரம்.
04/02/22

பெறுதல்.
திரு. G. உதயகுமார்,
2-40, கிழக்கு தொட்டிபாளையம்,
காடச்சநல்லூர்,
குமாரபாளையம்.

நகல்

1. உதவி இயக்குநர், மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம், நாமக்கல்.
2. ஊரக வளர்ச்சி உதவி இயக்குநர், (ஊராட்சிகள்), நாமக்கல்.
3. சம்பந்தப்பட்ட ஊராட்சிக்கான மண்டல துணை வ.வ.அலுவலர், திருச்செங்கோடு வட்டாரம்.
4. ஊராட்சி தலைவர், தோக்கவாடி கிராம ஊராட்சி, திருச்செங்கோடு வட்டாரம்.

உதவி இயக்குநர், மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம், நாமக்கல்
அவர்களின் நடவடிக்கைகள்
முன்னிலை. திருமதி.ஆ.மணிமேகலை, பி.இ.,

**ந.க.எண். 3328/2021 நாமா** **நாள்.** 24.1.22

**பொருள் :** அனுமதியற்ற மனைப்பிரிவு – நாமக்கல் மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம் – நாமக்கல் மாவட்டம்– திருச்செங்கோடு வட்டம்/ஊராட்சி ஒன்றியம் – தோக்கவாடி ஊராட்சி/கிராமம் – சர்வே எண். 10/1pt, 11/1A1,1B–ல் 5.52 ஏக்கர் பரப்பில் அமைந்துள்ள "ராம் நகர்"என்ற அனுமதியற்ற குடியிருப்பு மனைப்பிரிவிற்கு கொள்கை அளவிலான ஒப்புதல் வழங்குதல் – தொடர்பாக.

**பார்வை :**

1. அரசாணை (நிலை) எண். 78, வீட்டு வசதி மற்றும் நகர்புற வளர்ச்சித் (ந.வ.4(3)) துறை நாள். **04.05.2017**
2. அரசாணை (நிலை) எண். 172, வீட்டு வசதி மற்றும் நகர்புற வளர்ச்சித் (ந.வ.4(3)) துறை நாள். **13.10.2017**
3. அரசாணை (நிலை) எண். 55 வீட்டு வசதி மற்றும் நகர்புற வளர்ச்சித் (ந.வ.4(3)) துறை நாள். 02.05.2018.
4. அரசாணை (நிலை) எண்.21 வீட்டு வசதி மற்றும் நகர்புற வளர்ச்சித் (ந.வ.4(3)) துறை நாள். 05.02.2019.
5. அரசாணை எண்.100 வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் (ந.வ.4(3))த் துறை நாள்.**01.07.2019.**
6. நகர் ஊரமைப்பு ஆணையர், சென்னை அவர்களின் வழிகாட்டு நெறிமுறை ந.க.எண். 13193/2017/LA2 நாள்.30.10.2017, 31.10.2017, 07.11.2017, 17.11.2017 மற்றும் 20.12.2017.
7. மனுதாரர் திரு.தமிழ்செல்வன், மோகனூர் அவர்களின் ஆன்லைன் எண்.DTCP/P/0365856/2017, நாள். 26.07.2018.
8. இவ்வலுவலக கடிதம் இதே எண், நாள்.19.01.2022.

**********

**உத்தரவு:**

பார்வை 1, 2, 3, 4 மற்றும் 5–ல் கண்ட அரசாணையின்படியும் பார்வை 6–ல் கண்ட வழிகாட்டு நெறிமுறைகளின்படியும் பார்வை 7–ல் கண்ட கடிதத்துடன் பெறப்பட்ட உத்தேசம் பரிசீலனை செய்யப்பட்டு பார்வை 8–ல் கண்ட கடிதத்தினை தொடர்ந்து கீழ்காணும் உத்தரவு வழங்கப்படுகிறது.

நாமக்கல் மாவட்டம், திருச்செங்கோடு வட்டம்/ஊராட்சி ஒன்றியம், தோக்கவாடி ஊராட்சி/கிராமம், சர்வே எண். **10/1pt, 11/1A1,1B**–ல் **5.52** ஏக்கர் பரப்பில் அமைந்துள்ள "ராம் நகர்"என்ற அமையும் அனுமதியற்ற குடியிருப்பு மனைப்பிரிவிற்கு ம.வ(வரன்முறை)/ நாமா எண்.**03/2022** என எண்ணிடப்பட்டு கீழ்காணும் நிபந்தனைகளுடன் கொள்கை அளவிலான ஒப்புதல் வழங்கப்படுகிறது.

| | | |
|---|---|---|
| மனைப்பிரிவின் மொத்த பரப்பு | : | 5.52 ஏக்கர் அல்லது 240523.85 ச.அடி |
| சாலைகளின் மொத்த பரப்பு | : | 70801.42 ச.அடி |
| ஏற்கனவே ஒதுக்கப்பட்ட பொது உபயோகம் | : | ஏதுமில்லை |
| மொத்த மனைகள் | : | 95 எண்ணம் |
| விற்கப்பட்ட மனைகளின் எண்ணிக்கை | : | 64 எண்ணம் |
| விற்கப்பட்ட மனை எண்கள் | : | 1-14, 14B, 14C, 15-21, 21N, 22N, 24,25,28-30,36-47,53-55, 59-65,70-76,78,82 மற்றும் 83. |
| விற்கப்பட்ட மனைகளின் பரப்பளவு | : | 114120.50 ச.அடி |
| விற்கப்படாத மனைகளின் எண்ணிக்கை | : | 31 எண்ணம் |
| விற்கப்படாத மனைகளின் எண்கள் | : | 22S,23S,26,27,31-35,48-52,56-58, 66-69,77,79-81,84,86A,86B,86C, 87 மற்றும் 88. |
| விற்பனை செய்யப்படாத மனைகளின் பரப்பளவு | : | 55601.93 ச.அடி |
| திறவெளி ஒதுக்கீடு (OSR) இடத்தின் பரப்பு பூங்கா –I(மனை எண்கள்.85) | : | 5562.00 ச.அடி |

**செலுத்தப்பட வேண்டிய கட்டண விபரம்**

1) பரிசீலனை கட்டணம் :

| | |
|---|---|
| இணைய தளம் வாயிலாக மனை ஒன்றிற்கு ரூ.500/– வீதம் பரிசீலனைக் கட்டணம் செலுத்திய மனை எண்களின் விபரம் | மனை ஒன்றிற்கு ரூ.500/– வீதம் 01 மனைகளுக்கு ரூ.500/- செலுத்தப்பட்டுள்ளது. |

பரிசீலனை கட்டணம் செலுத்தப்படாத மனைகளுக்கு அக்கட்டணத்தை இணையதளம் வாயிலாக செலுத்த வேண்டும்.

2) அனுமதியற்ற இம்மனைப்பிரிவுக்கு வரன்முறைப்படுத்தும் கட்டணம் செலுத்தப்பட வேண்டிய உரிய கணக்குத் தலைப்பிலும் வளர்ச்சிக் கட்டணம் உள்ளாட்சியின் வங்கி கணக்கிலும் செலுத்தல் வேண்டும்.

அ) வரன்முறைப்படுத்தும் கட்டணம் செலுத்துவதற்கான அரசு கணக்குத் தலைப்பு

0217-Urban Development -60 Other Urban Development Schemes – 800 other Receipts – AT Receipts under Regularisation charges of Unapproved layout and Plots – DTCP 27 Non Taxation Fees – 30 Regularisation. DPC:0217-60-800-AT-2730

3) வரைபடத்தில் கண்டுள்ள OSR இடங்களை தவிர்த்து இதர மனைகளுக்கு அரசாணையின்படி உரிய கட்டணங்களை பெற்றுக்கொண்டு வரன்முறைப்படுத்த தெரிவிக்கப்படுகிறது.

மேற்காணும் கட்டணங்களை செலுத்திய பின்னரே சம்பந்தப்பட்ட மனைகளுக்கு உள்ளாட்சியால் வரன்முறை ஆணை வழங்கப்பட வேண்டும். விற்கப்படாத மனைகளைப் பொறுத்தமட்டில் அனைத்து மனைகளக்கு அல்லது பகுதி மனைகளுக்கு மட்டும் கட்டணத்தை செலுத்தி சம்பந்தப்பட்ட மனைகளுக்கான வரன்முறை ஆணையைப் பெற்றுக் கொள்ளலாம்.

பார்வை 1, 2, 3, 4 மற்றும் 5–ல் சுட்டிய அரசாணைகளின்படி மேற்காண் கட்டணம் தவிர வேறு கட்டணம் ஏதும் உள்ளாட்சி வசூலித்தல் கூடாது எனவும் தெரிவிக்கப்படுகிறது.

<u>நிபந்தனைகள்</u>

1. அரசாணை (நிலை) எண். 172, வீட்டு வசதி மற்றும் நகர்புற வளர்ச்சித் (ந.வ.4(3)) துறை நாள். 13.10.2017–ல் விதி எண்.7(g)(ii)–ன்படி மனைப்பிரிவு வரைபடத்தில் உள்ளவாறு சாலைகள் மற்றும் திறந்தவெளி ஒதுக்கீடு (OSR) இடங்கள் சம்பந்தப்பட்ட உள்ளாட்சியின் பெயருக்கு மாற்றம் செய்யப்பட்டதாக கருதப்படும்.
2. நில உரிமம் குறித்து வழங்கப்பட்ட சான்றுகள் மற்றும் பரிசீலனைக்கு சமர்ப்பிக்கப்பட்ட ஆவணங்கள் சரியானவையல்ல என அறியப்பட்டால் அல்லது மனைப்பிரிவிற்கு கொள்கை அளவிலான ஒப்புதல் வழங்கியதால் பாதிப்பு ஏற்படக்கூடிய சூழ்நிலை ஏற்படின் இம்மனைப்பிரிவிற்கு வழங்கப்பட்ட கொள்கை அளவிலான ஒப்புதல் எவ்வித முன்னறிவிப்பின்றி ரத்து செய்யப்படும்.
3. இம்மனைப்பிரிவில் அரசு புறம்போக்கு நிலம் ஆக்கிரமிப்பு குறித்து சம்பந்தப்பட்ட உள்ளாட்சி உறுதி செய்து கொள்ள வேண்டும்.
4. மனைப்பிரிவின் ஊடே நீர்நிலைகள் அமையுமாயின் அதற்கு பாதிப்பு ஏற்படாதவாறு கட்டிடங்கள் கட்டப்பட வேண்டும்.
5. மனைப்பிரிவின் ஊடே Tower Line, HT Line, LT Line and Power Line ஆகியன செல்லுமாயின் அவைகள் சாலையின் போக்கிற்கு மாற்றிய பின்னரே முறைப்படுத்தப்படல் வேண்டும்.
6. மனைப்பிரிவு அமையும் புல எண்களில் வழக்கு ஏதும் நிலுவையில் இருப்பது பின்னர் அறியப்பட்டால் மனைப்பிரிவுக்கு வழங்கிய ஒப்புதல் எவ்வித முன்னறிவிப்பும் இன்றி ரத்து செய்து நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.
7. அரசாணை எண்.100 வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை நாள்.01.07.2019–ல் குறிப்பிட்ட நிபந்தனைகள் பின்பற்ற வேண்டும். மேலும் அரசாணையின்படி மனைப்பிரிவு சாலைகள் மற்றும் பொது ஒதுக்கீடு பகுதி மனுதாரரால் தானமாக சம்மந்தப்பட்ட துறையில் ஒப்படைப்பு செய்த பின்னரே உள்ளாட்சியால் இறுதி ஒப்புதல் வழங்கப்பட வேண்டும்.
8. பார்வை 1, 2, 3, 4 மற்றும் 5 ஆகிய அரசாணைகளில் குறிப்பிட்ட நிபந்தனைகள் பின்பற்றப்பட வேண்டும்.
9. சாலை மற்றும் பொது ஒதுக்கீடு ஒப்படைப்பு செய்யப்படவில்லை எனில் இம்மனைப்பிரிவுக்கு வழங்கப்பட்ட ஒப்புதல் முன் அறிவிப்பு இன்றி ரத்து செய்யப்படும் என்ற விபரம் தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

மேற்கண்ட நிபந்தனைகளின் அடிப்படையில் கொள்கை அளவிலான ஒப்புதல் வழங்கப்பட்ட மனைப்பிரிவு வரைபடம் இரண்டு நகல்கள் மேல் நடவடிக்கைக்காக அனுப்பிவைக்கப்படுகிறது.

<u>இணைப்பு</u>

மனைப்பிரிவு வரைபடம் இரண்டு நகல்கள்.

உதவி இயக்குநர்,
மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம்,
நாமக்கல்.

24.1.22

<u>பெறுநர்,</u>

வட்டார வளர்ச்சி அலுவலர்,
திருச்செங்கோடு ஊராட்சி ஒன்றியம்,
திருச்செங்கோடு வட்டம்,
நாமக்கல் மாவட்டம்.

நகல்

1. திரு.ஜி.உதயகுமார்,
   தோக்கவாடி கிராமம்,
   திருச்செங்கோடு கிராமம்,
   நாமக்கல் மாவட்டம்.

2. தலைவர்,
   தோக்கவாடி ஊராட்சி,
   திருச்செங்கோடு ஊராட்சி ஒன்றியம்,
   திருச்செங்கோடு ட்டம்,
   நாமக்கல் மாவட்டம்.

3. Tamil Nadu Real Estate Regulatory
   Authority (TNRERA),
   No:1A, 1st Floor,
   Gandhi Irwin Bridge Road,
   Egmore,
   Chennai – 600 008.

4. சார்பதிவாளர்,
   திருச்செங்கோடு சார்பதிவாளர்
   அலுவலகம்,
   நாமக்கல் மாவட்டம்.
   } சாலை மற்றும் OSR பகுதியினை உள்ளாட்சியின் பெயரில் பதிவு செய்யும் பொருட்டு.

5. உதவி இயக்குநர் (நில அளவை),
   நாமக்கல் மாவட்ட ஆட்சியர்
   அலுவலகம்,
   நாமக்கல் மாவட்டம்
   } சாலை மற்றும் OSR பகுதியினை உள்ளாட்சியின் பெயரில் வருவாய் ஆவணங்களில் உட்பிரிவு செய்யும் பொருட்டு.

6. தாசில்தார்,
   வட்டாட்சியர் அலுவலகம்,
   திருச்செங்கோடு வட்டம்.
   நாமக்கல் மாவட்டம்.

7. இருப்புக் கோப்பு